150 ரூபாய் வரையிலே செலவு ஆகின்றது. ஆகவே இந்தத் தொகையினை உயர்த்தி 150 ரூபாயாக உதவித் தொகை கொடுக்க அரசு முன் வருமா ?

அடுத்து மத்திய அரசினைப் பற்றிச் சொல்கின்றபோது மத்திய அரசு கொடுக்கின்ற உதவித் தொகை போதுமானதாக இல்லை. அந்தக்கல்லூரி மாணவர்களுக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்தால் கூட ஆண்டு ஒன்றுக்கு 1,200 ரூபாய், 1,300 ரூபாய் கூட செலவாகின்றது. ஆகவே அந்த மீதித் தொகையை நம்முடைய மாநில அரசு கொடுத்து உதவ முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னை நகரைப் பொறுத்தவரையிலே விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்குத் தற்போது 95 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகின்றது. அது போதவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். இப்போது 1981—82ஆம் ஆண்டுதான் இந்த உணவுக்கான உதவித் தொகை உயர்த்தித் தரப்படுகின்றது. வருகின்ற ஆண்டுகளில் நிதிநிலைமையை அனுசரித்து மாணவர்களின் நிலைமையையும் கருத்தில் கொண்டு அரசு இதில் கவனம் செலுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து மத்திய அரசினைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். தற்போது தமிழக அரசு இத்தகைய கல்லூரிகளிலே தங்கிப் பயிலக் கூடிய மாணவர்களுக்காக சிறப்புக் கடனுதவியாக அளித்து வருகின்றது. அதையே அரசு தொடர்ந்து செயல்படுத்தும். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கக் கூடிய கருத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க தற்போது அரசால் இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓா உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்புதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு தலைவரவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர், கூட்டுறவுத் துறையிலே............ (குறுக்கீடு)..............ஜப்தி செய்யப்பட்டிருக்கின்றது......

1982 மார்ச் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபற்றி எல்லாம் என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். பதில் சொல்கிறேன்.

(3) ஒத்தி வைப்புத் தீர்மானம்.

தென்னாற்காடு கூட்டுறவு நூற்பாலைக் கிடங்கில் தீ விபத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் பாபு ஜனார்த்தனன், கே. எம். தங்கமணி, இரா. கருப்பையா, மு. அம்பிகாபதி, ஜே. ஹேமச்சந்திரன், டி. மணி, ரா. கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என்.எஸ். வி. சித்தன் ஆகியோர் ''சாரம், தென்னாற்காடு கூட்டுறவு நூற்பாலைக்கிடங்கில் 8—3—1982 அன்று தீ விபத்து ஏற்பட்டுஅதனால் 5 இலட்சம் நூல் பேல்கள் சாம்பல் ஆனதினால் அங்கு ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி திரு. கே. எம். தங்கமணி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை சாரத்திலே இயங்குகின்றது. இது தென்னாற்காடு மாவட்டத்திலே இருக்கின்ற ஒரே ஒரு கூட்டுறவு நூற்பாலையாகும். 8—3—1982 அன்று பஞ்சு எரிந்துவிட்டதாகப் பத்திரிகையிலே தகவலும் எனக்கு அதிகாரபூர்வமான தகவலும் வந்திருக்கின்றது. 5 இலட்சம் ரூபாய் விலை மதிப்புள்ள பஞ்சுகள் எல்லாம் எரிந்துவிட்டன. இந்த மாதிரி தீ விபத்துக்கள் பல தடவை இதிலே நடந்துவந்திருக்கின்றன. தீ விபத்து ஏற்பட்டவுடன் ஐ.என்.டி.யு.சி. தொழிலாளர்களும் மற்றும் பல தொழிலாளர்களும் ஒன்று கூடித் தீயை அணைத்திருக்கிறார்கள். நல்லவேளையாக யாரும் பலியாகவில்லை என்ற தகவல் கிடைத்திருக்கின்றது. இது ஓரளவுக்கு சந்தோஷமாக இருக்கின்றது.

அந்த ஆலையையும் பஞ்சையும் இன்ஷூர் செய்திருக்கிறார்களா? அங்கு ஏற்பட்ட தீ விபத்தால் ஏற்பட்ட நஷ்டத்தை அந்த இன்ஷூரன்ஸ் தொகையை வாங்கியிருக்கிறார்களா என்று தெரியவில்லை. அந்தத் தீ விபத்தால் ஆலை நிறுத்தப்பட்டுள்ளதா? எதிர்காலத்தில் இம்மாதிரியான தீ விபத்துக்கள் நடக்காதவாறு இருக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைப் பற்றிய விவரங்களையெல்லாம் விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்